2004 பிப்ரவரி 5]

7—

மருத்துவ ஊர்தி

***42203–திரு. பெ. வாசுதேவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மதுராந்தகம் தொகுதி, பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு மருத்துவ ஊர்தி வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

24 மணி நேரமும் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு மட்டுமே அவசர கால ஊர்தி வழங்கப்பட்டுள்ளது. மதுராந்தகம் தொகுதி, பவுஞ்சூர் ஆரம்ப சுகாதார நிலையம், முதன்மை அரசு ஆரம்ப சுகாதார நிலையமாதலால், இந்நிலையத்திற்கு அவசர கால ஊர்தி (Ambulance) வழங்க அவசியம் எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வாசுதேவன், இருக்கையில் இல்லை.

வினா எண் 8, திருமதி வளர்மதி ஜெபராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

8—

விதவைப் பெண்களுக்கு பணி நிரந்தரம்

***43520–திருமதி வளர்மதி ஜெபராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பதிலிப் பணியாளர்களாக பத்து ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் விதவைப் பெண்களை அரசு நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்குமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் பதிலிப் பணியாளர்களாக 10 ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் விதவைகளைப் பொறுத்த வரையில், வழக்கு நீதிமன்றத்திலே இருப்பதால், தற்சமயம் எந்த முடிவும் எடுக்க முடியவில்லை.

திருமதி வளர்மதி ஜெபராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆதரவற்ற பெண்கள், நம்முடைய இதயதெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் முதன்முதலில் ஆட்சிப் பொறுப்பையேற்றிருந்த 1993 ஆம் ஆண்டு, மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையிலே பணியாளர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களைப் பொறுத்த வரையில், சொந்தக் காலில் நிற்கக்கூடிய பெண்கள்; தினந்தோறும் அவர்கள் பணிக்கு வரவேண்டும் என்கின்ற நிபந்தனை அவர்களுக்கு இருக்கிறது. அவர்களுக்குப் பணி இருந்தாலும், இல்லாவிட்டாலும், நிரந்தரப் பணியாளர்கள் விடுமுறை எடுத்தால் மட்டுமே அவர்களுக்கு வேலையும், ஊதியமும் கிடைக்கிறது. பஸ் கட்டணமும் அவர்கள் கொடுத்து, வேலைக்கு வந்து, வேலையில்லை என்று சொல்லி திரும்பிப் போகவேண்டிய சூழ்நிலை. எனவே, சொந்தக் காலில் நிற்கிற பெண்கள், ஆதரவற்ற பெண்கள் இவர்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, அம்மா அவர்களால் நியமிக்கப்பட்ட இந்தப் பெண்களுக்கு, அவர்களை நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கின்ற வரை, ஒரு குறிப்பிட்ட தொகையையாவது—fixed amount—ஐயாவது மாதச் சம்பளமாகக் கொடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவர்கள் அனைவரும் தமிழ்நாடு நிருவாகத் தீர்ப்பாயத்தில் வழக்கு எண் 2303/2003–ல் வழக்குத் தொடர்ந்துள்ளனர். வழக்கு தற்சமயம் நிலுவையில் இருப்பதால், இப்போது எந்த முடிவும் எடுக்க முடியாது.

முற்பகல் 10–40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி வளர்மதி ஜெபராஜ். (குறுக்கீடு) இல்லையா? திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

2004 பிப்ரவரி 5]

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராஜாஜி மருத்துவமனையில் பணியாளர்களை நிரந்தரப்படுத்துவதற்கு வழக்கு இருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தமிழகத்திலே பல அரசு மருத்துவமனைகளிலே இதேபோன்று 'Contingency' என்ற முறையிலே பல பணியாளர்கள் பல வருடங்களாகப் பணியாற்றி வருகிறார்கள். அவர்களை நிரந்தரப்படுத்துவதற்கு அரசு ஏதேனும் ஒரு திட்டத்தை உருவாக்கி, அப்படி ஒரு 10 ஆண்டுகளுக்கு மேலாகப் பணியாற்றக் கூடியவர்களையாவது உடனடியாக நிரந்தரப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவக் கல்வி இயக்குநரின் கட்டுப்பாட்டின்கீழ் கிட்டத்தட்ட 468 பேர் பணிபுரிந்து வருகிறார்கள். இவர்கள் அனைவருமே நீதிமன்றத்திற்குச் சென்றதால்–மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கும்போது, தற்சமயம் அவர்கள் நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கு நிலுவையில் இருப்பதால்–நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடனே இதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 9, திரு. ஜி. பழனிசாமி, மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.

9–

ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி

***10720**–திரு. ஜி. பழனிசாமி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) திருவாரூர் மாவட்டம், எடையூர் ஊராட்சி, சோத்திரியம் கிராமத்தில் ஆதிதிராவிடர் தொடக்கப் பள்ளி துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS